தினமணி

**மரவள்ளியில் பூச்சி தாக்குதல்**

First Published : 16 Jul 2010 12:00:00 AM IST

பண்ருட்டி,ஜூலை 15: மரவள்ளிப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெ.மல்லிகா விளக்கியுள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

÷அண்ணாகிராமம் வட்டார பகுதியில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இதில் மாவுப்பூச்சி, வெள்ளை ஈ தாக்குதல் காரணமாக இலைகள் மஞ்சள் நிறமாகி பழுத்து காய்ந்து விடுகிறது. இது போன்ற அறிகுறி அதிக இடத்தில் தென்படுகிறது.

÷இதனைக் கட்டுப்படுத்த டிரை அசோபாஸ் (2 மிலி), பாசலோன் (2 மிலி), புரேபினோபாஸ் 50 இசி (2 மிலி), டைமெத்தோயேட் 30 இசி (2 மிலி), குளோர்பைரிபாஸ் 20 இசி (4 மிலி) (அடைப்பு குறியில் உள்ளது ஒரு லிட்டர் தண்ணீருக்கு) இதில் ஏதேனும் ஒரு மருத்துடன், வேப்ப எண்ணெய் (5 மிலி) கலந்து இலையின் அடிப்பாகம் நனையும் வரை 10 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.

÷மாவுப்பூச்சி மட்டும் தென்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீரில் வேப்ப எண்ணெய் 20 மிலி மற்றும் 5 மிலி சோப்பு கரைசல் கலந்து இலையின் அடிப்பாகம் நனையும்படி தெளிக்க வேண்டும்.

**நெல்லை, பாளை. கால்வாய் பாசனத்தில் 6000 ஹெக்டேர் நிலம் தரிசு**

First Published : 15 Jul 2010 11:48:29 AM IST

திருநெல்வேலி, ஜூலை 14: திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரையில் தென் மேற்குப் பருவ மழை வழக்கமான அளவு பெய்துள்ள போதிலும் திருநெல்வேலி, பாளையங் கால்வாய் பாசனப் பகுதிகளில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த ஆண்டும் கார் பருவ சாகுபடி பொய்த்துள்ளது.

இம் மாதம் 20 ஆம் தேதி இவ்விரு கால்வாய்களுக்கும் பாபநாசம் அணையில் இருந்து திறந்துவிடப்பட உள்ள தண்ணீர் குடிநீருக்காக மட்டுமே பயன்படுமே தவிர, நெல் பயிரிடுவதற்கான காலம் கடந்து விட்டதால் சுமார் 6 ஆயிரம் ஹெக்டேர் பாசன நிலங்கள் தரிசு நிலமாகவே காட்சி அளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென் மேற்குப் பருவ மழை காலத்தில் இம் மாவட்டத்தில் உள்ள பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு, கடனா, ராமநதி, அடவிநயினார், கருப்பாநதி உள்ளிட்ட அணைகள் மூலம் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களில் கார் பருவ நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். ஜூன் மாதம் நாற்றுபாவி ஜூலை, ஆகஸ்டில் நடவு பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு இதுவரையில் வடக்கு கோடைமேலழகியான், தெற்கு கோடை மேலழகியான், நதியுண்ணி, கன்னடியன், கோடகன் கால்வாய் ஆகியவற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய வட்டாரங்களில் முழுமையாகவும்,

கடையநல்லூர், செங்கோட்டை, தென்காசி ஆகிய வட்டாரங்களில் பகுதியாகவும் என சுமார் 6,500 ஹெக்டேரில் மட்டுமே நடவுப் பணிகள் முடிவடைந்துள்ளன. ஆகஸ்ட் மாதம் வரை நடவு பணிகள் நடைபெறும் என்பதால் மேலும் சுமார் 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ஹெக்டேர் வரையில் சாகுபடி நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளான திருநெல்வேலி, பாளையங்கோட்டை கால்வாய்களில் இதுவரை தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இதனால் இவ்விரு கால்வாய்களின் பாசனப் பகுதிகளான சுமார்
6 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களில் கார் பருவ சாகுபடி தொடங்கப்படவில்லை.

வளமையான மழை அளவு: பாபநாசம் அணையில் போதுமான அளவு தண்ணீர் இல்லாததால் இவ்விரு கால்வாய்களுக்கும் முன்னரே தண்ணீர் திறந்துவிட திறக்க இயலவில்லை. இந்த ஆண்டு ஜூன் மாதம் 29.1 மி.மீ. (வழக்கமான மழை அளவு 29.6 மி.மீ.) மழையும், ஜூலையில் இதுவரையில் 26 மி.மீ. (வழக்கமான மழை 26.4 மி.மீ.) மழையும் பெய்துள்ளது. எனினும், கடந்த பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் வழக்கமான 131.3 மி.மீ. மழையைவிட மிக குறைவாக 43.08 மி.மீ. மழையே பெய்துள்ளது. இதனால் அணைகளில் நீர் இருப்பு குறைந்து கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட இயலாத நிலை ஏற்பட்டுவிட்டதாக வேளாண்மை துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டும் இதேபோல் அணையில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டதால் திருநெல்வேலி, பாளையங் கால்வாய் பாசனப் பகுதிகளில் கார் பருவ சாகுபடி நடைபெறவில்லை. இதர சில பகுதிகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் சுமார் 7 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களில் கார் பருவ சாகுபடி நடைபெறவில்லை. இந்த ஆண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக இவ்விரு கால்வாய் பாசனப் பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது பாபநாசம் அணையில் சுமார் 52 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. மழையை எதிர்நோக்கி இம் மாதம் 20 ஆம் தேதி திருநெல்வேலி, பாளையங் கால்வாய்களில் தண்ணீர் திறந்துவிட பொதுப்பணித் துறை திட்டமிட்டுள்ளது. அந்த தண்ணீர் கார் பருவ சாகுபடிக்காக அல்ல என்றும் குடிநீருக்காக மட்டுமே என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும், தற்போது நாற்றுபாவி வைத்துள்ள தருவை, முன்னீர்பள்ளம், கல்லூர், சுத்தமல்லி, பேட்டை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் அந்த தண்ணீரைக் கொண்டு சுமார் 200 ஹெக்டேர் நிலங்களில் நடவு பணிகளை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இந்த தண்ணீரைக் கொண்டு இனிமேல் நாற்றுபாவி நடவு செய்தால் வட கிழக்கு பருவ மழையால் அறுவடை பாதிக்கப்படும் என விவசாயிகள் கூறுகின்றனர். ஆக மொத்தத்தில் இந்த ஆண்டும் திருநெல்வேலி, பாளையங் கால்வாய் விவசாயிகளுக்கு கார் பருவம் பொய்த்துபோகும் நிலையே ஏற்பட்டுள்ளது.

வீட்டுமனைகளாகும் ஆபத்து: இவ்விரு கால்வாய் பாசனப் பகுதிகளில் பெரும்பாலானவை திருநெல்வேலி, பாளையங்கோட்டை நகரப் பகுதிக்குள்ளும், நகரைச் சுற்றிலுமே அமைந்துள்ளன. இப்பகுதிகளில் முப்போகம் நெல் விளைந்து வந்த காலங்கள் உண்டு. அந்த நிலை மாறி இருபோகம் விளைந்து வந்தது. அப்படி இருந்தும் விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாகி உள்ளன.

இந்த சூழ்நிலையில், இப்போது இரு போக நெல் (கார், பிசானம்) விளைச்சலுக்கும் வழி இல்லாமல் ஒரு போகப் ம (பிசானம்) உறுதி என்ற நிலை ஏற்பட்டுள்ளதால் விளைநிலங்கள் எல்லாம் வேகமாக வீட்டுமனைகளாகும் ஆபத்தும் உள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 80.86 அடி**

First Published : 15 Jul 2010 11:28:17 AM IST

சேலம், ஜூலை 14: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.86 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 5,753 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,008 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 42.81 டி.எம்.சி.

**ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்வு**

First Published : 15 Jul 2010 10:47:54 AM IST

ஒட்டன்சத்திரம்,ஜூலை 14: ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள அத்திக்கோம்பை,காளாஞ்சிபட்டி,கொல்லபட்டி,ஜவ்வாதுபட்டி,கேதையுறும்பு,புலியூர்நத்தம்,விருப்பாச்சி,சத்திரப்பட்டி,மஞ்சநாயக்கன்பட்டி,போடுவார்பட்டி,தேவத்தூர் பெரியகோட்டை ஆகிய கிராமங்களில் அதிக அளவு தக்காளி பயிர் செய்வது வழக்கம். ஆனால், பருவமழை தவறியதால் கிணற்று தண்ணீரை வைத்து பயிரிட்ட பயிர்களை விவசாயிகளால் முழுமையாகக் காப்பாற்ற முடியவில்லை.

இதனால், காய்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன.

புதன்கிழமை 14 கிலோ கொண்ட தக்காளிப் பெட்டி ரூ.400-க்கு விற்பனையானது.

அதேபோல, மற்ற காய்கறிகளின் விலை (கிலோவில்): முருங்கைக்காய்- ரூ.15, தட்டப்பயிர்- ரூ.4.50,பீன்ஸ்- ரூ.17,பாகற்காய்- ரூ.9,பீட்ரூட்- ரூ.8.50,சின்னவெங்காயம்- ரூ.30,டிஸ்கோ கத்தரிக்காய் ஒரு பை- ரூ.70 முதல் 80 வரை,20 கொண்ட காளிபிளவர் பை- ரூ.125,பூசணிக்காய் கிலோ- ரூ.4,கொத்தவரை கிலோ- ரூ.3 முதல் 4 வரை,அவரைக்காய் கிலோ- ரூ.6 முதல் 17 வரை-க்கும்,மாங்காய் கிலோ- ரூ.20 முதல் 25 வரை விற்பனையானது.

**பருவ மழை பொய்த்ததால் கேரட் விளைச்சல் பாதிப்பு**

First Published : 15 Jul 2010 10:47:37 AM IST

கொடைக்கானல், ஜூலை 14: கொடைக்கானலில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் கேரட், முள்ளங்கி, பீன்ஸ், உருளை ஆகியவற்றின் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கொடைக்கானல் பகுதிகளான செண்பகனூர், பிரகாசபுரம், வில்பட்டி, அட்டுவம்பட்டி, சகாயபுரம், பள்ளங்கி, கோவில்பட்டி, கோம்பை ஆகிய பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கேரட் சரியாக விளைச்சலின்றி காணப்பட்டது.

இதனால், ஒரு கிலோ தற்போது ரூ.5-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நன்கு விளைந்த கேரட் ஒரு கிலோ ரூ. 20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்படும்.
இந்த ஆண்டு பருவமழையற்ற காலங்களில் மழை பெய்ததால், விவசாய நிலங்கள் சேதமடைந்து விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

**புத்தன் அணை பகுதியில் 20 மி.மீ. மழை**

First Published : 15 Jul 2010 12:18:20 PM IST

நாகர்கோவில், ஜூலை 14: கன்னியாகுமரி மாவட்டத்தில் புத்தன்அணைப் பகுதியில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 20 மி.மீ. மழை பெய்துள்ளது.
பிற அணைப் பகுதிகள், இடங்களில் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):
பேச்சிப்பாறை- 5, பெருஞ்சாணி- 19.8, சிற்றாறு 1- 8, சிற்றாறு 2- 5, முக்கடல்- 7, சுருளோடு- 15, பூதப்பாண்டி- 2.8, கன்னிமார்- 4.1, நாகர்கோவில்- 2, ஆனைக்கிடங்கு- 5.4, அடையாமடை- 17, குருந்தன்கோடு- 3.6, இரணியல்- 2.6, குளச்சல்- 4.8, கோழிப்போர்விளை- 3. முள்ளங்கினாவிளை- 4.2.
பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 520 கன அடி, பெருஞ்சாணி அணைக்கு 220 கன அடி, சிற்றார் 1 அணைக்கு 147 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.
பேச்சிப்பாறை அணையிலிருந்து 703 கன அடியும், பெருஞ்சாணி அணையிலிருந்து 230 கனஅடியும், சிற்றார் 1 அணையிலிருந்து 200 கனஅடியும் தண்ணீர் பாசனத்துக்காக திறந்துவிடப்பட்டிருந்தது.

**அதிருப்தியில் பசுந்தேயிலை விவசாயிகள்**

First Published : 15 Jul 2010 11:28:41 AM IST

உதகை, ஜூலை 14: நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் விலையில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வந்தாலும் பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. இருப்பினும் சராசரியாக கடந்தாண்டை விட நடப்பாண்டின் விலையில் பெருமளவு குறைந்துள்ளது.
குன்னூர் தேயிலை ஏல மையத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தேயிலை ஏலத்தில் மொத்தம் 16.84 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 11.67 லட்சம் கிலோ இலை ரகமும், 5.17 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் இடம் பெற்றிருந்தன. உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்தமட்டில் வழக்கமாக பங்கேற்கும் ஆந்திரம், கர்நாடகம், குஜராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைவாகவே இருந்தது. ஏலத்தில் பங்கேற்றவர்களும் தரமான தேயிலையை குறைந்தளவிலேயே வாங்கினர்.
ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தமட்டில் பாகிஸ்தான் மற்றும ரஷிய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு திருப்திகரமாகவே இருந்தது. இருப்பினும் ஏலம் களைகட்டவில்லை. இதனால் அனைத்து ரக

தேயிலைத்தூளின் விலையிலும் ரூ.2 வரை சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனைக்கு வந்த தேயிலைத்தூளில் 30 சதம் வரை தேக்கம் ஏற்பட்டது.

சிடிசி ரகத்தில் தர்மோனா தேயிலைத் தொழிற்சாலையின் தூளுக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.144 கிடைத்தது. 35க்கும் மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் கிலோவிற்கு ரூ.100க்கு மேல் பெற்றன.

ஆர்த்தோடக்ஸ் ரகத்தில் சாம்ராஜ் தேயிலைத் தொழிற்சாலையின் தூளுக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.165 கிடைத்தது. இதில் 25க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் ரூ.100க்கு மேல் விலை பெற்றன.

விலை நிலவரத்தை பொறுத்தமட்டில் கடந்த வார ஏலத்துடன் ஒப்பிடுகையில் பெரிய வித்தியாசம் தென்படாவிட்டாலும் இலை ரகத்தில் சாதாரண ரகத்தில் கிலோவிற்கு ரூ.34 முதல் ரூ.39 வரையிலும், சிறந்த ரகத்தில் ரூ.80 முதல் ரூ.115 ஆகவும் இருந்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்தில் கிலோவிற்கு ரூ.34 முதல் ரூ.40 வரையிலும், சிறந்த ரகத்தில் ரூ.90 முதல் ரூ.134 வரையிலும் இருந்தது.

தேயிலைத்தூளின் குறைந்தபட்ச விலை கிலோவுக்கு ரூ.40 வரை இருந்த நிலையில், கடந்த சில வாரங்களில் படிப்படியாக குறைந்து தற்போது ரூ.34க்கு வந்துள்ளது. இதன் காரணமாக பசுந்தேயிலை விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.5 வரை மட்டுமே முன்பணமாக வழங்கப்படுகிறது. இதனால் தேயிலை விவசாயிகளும் அதிருப்தியடைந்துள்ளனர்.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்கப்பட்ட தேயிலைத்தூளின் சராசரி விலை கிலோவுக்கு ரூ.50 ஆக இருந்தது. ஆனால், கடந்த ஆண்டில் சராசரியாக கிலோவுக்கு ரூ.78 ஆக இருந்தது. எனவே, தேயிலை வர்த்தகத்தில் கிடைக்கும் வருமானம் கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அடுத்த ஏலம் இவ்வாரம் நடக்கிறது. இதில் 18.35 லட்சம் கிலோ தேயிலைத்தூள் இடம் பெற்றுள்ளளது. இதில் இலை ரகத்தில் 12.77 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகத்தில் 5.58 லட்சம் கிலோவும் அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 1.51 லட்சம் கிலோ அதிகமாகும்.

**கோழிப் பண்ணைகளில் ஆய்வு**

First Published : 16 Jul 2010 09:38:40 AM IST

திருச்செங்கோடு, ஜூலை 15: திருச்செங்கோடு அருகே கோழிப் பண்ணைகளில் சுகாதார துறையினர் வியாழக்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

மாணிக்கம்பாளையம் வட்டார மருத்துவ அலுவலர் ராஜேந்திரன் தலைமையில், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சிங்காரவேலு, சுகாதார ஆய்வாளர்கள் சரவணமூர்த்தி, கனகராஜ் ஆகியோர் சோதனையில் ஈடுபட்டனர்.

மாணிக்கம்பாளையம், கூதம்பூண்டி, சாயக்காடு, உஞ்சனை, செட்டிசாலப்பாளையம், சமுத்திரபாளையம் கோழிப் பண்ணைகளில் இந்த ஆய்வு நடந்தது. கோழி எச்சங்களை அப்புறப்படுத்துவது குறித்தும், கோழிகளை முறையாகப் பராமரிப்பது குறித்தும் கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இறந்த கோழிகளை எரியூட்டி அழிக்குமாறும், அவற்றில் ஈக்கள் உற்பத்தி ஆகாமல் தடுக்க கோழித் தீவனத்துடன் மருந்துகள் கலப்பது குறித்தும் எடுத்துக் கூறினர்.

**உணவுப் பணவீக்கம் 12.81 சதவீதமாக உயர்வு**

First Published : 16 Jul 2010 12:00:00 AM IST




புது தில்லி, ஜூலை 15: நாட்டின் உணவுப் பணவீக்கம் ஜூலை 3-ம் தேதியுடன் முடிவைடந்த வாரத்தில் 12.81 சதவீதமாக உயர்ந்தது. முந்தைய வாரத்தில் 12.63 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

÷கடந்த மாதம் பெட்ரோல் மீதான விலைக்கட்டுப்பாட்டை மத்திய அரசு நீக்கியது. இதனால் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ. 3.50 உயர்ந்தது. டீசல் விலையும் லிட்டருக்கு ரூ. 2 உயர்த்தப்பட்டது. இதனால் உணவுப் பணவீக்க அளவு உயர்ந்துள்ளது.

÷கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் காய்கறிகளின் விலை 5.70 சதவீதம் குறைந்து காணப்பட்டது. இருப்பினும் பருப்பு உள்ளிட்ட பொருள்களின் விலை உயர்வு காரணமாக பணவீக்கம் உயர்ந்தது.

÷உருளைக்கிழங்கு விலை 43 சதவீதமும், வெங்காயத்தின் விலை 5 சதவீதமும் குறைந்திருந்தது. ஆனால் பருப்பு விலை 29 சதவீதமும், பால் விலை 15 சதவீதமும், பழங்களின் விலை 15 சதவீதமும் உயர்ந்து காணப்பட்டது.

÷பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டதால் எரிபொருள் விலை 14.27 சதவீதம் உயர்ந்தது. இதனால் ஜூன் மாத ஒட்டுமொத்த பணவீக்கம் 10.55 சதவீதமாக உயர்ந்தது.

÷உணவுப் பணவீக்கம் கணிசமாக உயரும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டதால் உணவுப் பொருள்களின் விலை உயர்வு தவிர்க்க முடியாது. ஏனெனில் சரக்கு போக்குவரத்து கட்டணங்கள் உயர்த்தப்படும். இருப்பினும் இதன் முழுமையான தாக்கம் அடுத்த சில வாரங்களில் தெரியும் என்று பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் கோவிந்த ராவ் தெரிவித்தார்.

÷தற்போது ஏற்பட்டுள்ள உயர்வானது பருவ மழையால் ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பால் உருவானது. பெட்ரோல், டீசல் விலை உயர்வால் ஏற்படும் பாதிப்பு அடுத்த சில வாரங்களில் முழுமையாக தெரியும் என்று ஐசிஆர்ஆஇஆர் பொருளாதார மைய இயக்குநர் ராஜீவ் குமார் தெரிவித்தார்.

÷குறுவை சாகுபடி பயிர்கள் சந்தைக்கு வரத் தொடங்கும்போது உணவுப் பணவீக்கம் குறையும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

÷அக்டோபர் மாதத்தில் ஓரளவு பொருள்களின் விலை குறைய வாய்ப்புள்ளது என்று ராஜீவ்குமார் தெரிவித்துள்ளார்.
÷பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இம்மாதம் 27-ம் தேதி ரிசர்வ் வங்கி வெளியிட உள்ள நிதிக் கொள்கையில் வட்டி விகிதம் 0.25 சதவீதம் உயர்த்தப்படும் என்று எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

தினமலர்

**சர்க்கரை ஆலை அலுவலகம் திறப்பு**

தாராபுரம்: தாராபுரத்தில், "அமராவதி' கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கோட்ட அலுவலகம் திறப்பு விழா நடந்தது.தாராபுரம் வட்டார கரும்பு விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனை கூறவும், கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வசதியாக தாராபுரத்தில் அமராவதி சர்க்கரை கூட்டுறவு ஆலை கோட்ட அலுவலம் திறக்கப்பட்டது. அமராவதி பாசன சங்கத் தலைவர் வேலுசாமி தலைமை வகித்தார். உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஈஸ்வரமுத்தி, சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அழகர்சாமி வரவேற்றார். கோட்ட அலுவகத்தை ஆலை தனி அலுவலர் ராமகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

**சத்தான காய்கறியில் நஞ்சு இயற்கை விஞ்ஞானி தகவல்**

கோபிசெட்டிபாளையம்: ""முட்டைகோஸ், பீட்ரூட், திராட்சை, கேரட் போன்ற சத்து மிக்க காய்கறிகள் நஞ்சாக மாறி வருகிறது,'' என இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.பவானி நதி பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் சுற்றுச்சூழல் விழா கோபி வைரவிழா மேல்நிலைப்பள்ளி கே.எம்.ஆர்., அரங்கத்தில் நடந்தது. இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:இந்தியாவில் ஆண்டுக்கு 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் டன் வரை விவசாய நிலங்களில் பூச்சி கொல்லி மருந்து பயன்படுத்தப்படுகிறது. பறவை இனங்கள் 200க்கும் அதிமாக உள்ளது. பூச்சிகள், சிலந்தி மற்றும் குளவிகளை தின்று பறவைகள் உயிர் வாழ்கிறது. ஆனால், வயல்களில் போடப்படும் மருந்துகளால் பூச்சி இனங்கள் அழிவதால், பறவைகளும் உணவின்றி அழிந்து வருகிறது. முட்டைகோஸ், பீட்ரூட், திராட்சை, கேரட் போன்ற சத்து மிக்க காய்கறிகள் எல்லாம் நஞ்சாக மாறி வருகிறது.

இயற்கை சுழலை புரிந்து கொண்டு விவசாயம் மேற்க்கொள்ள வேண்டும்.இந்தியாவில் ஐந்து முதல் 10 சதவீதம் வரைதான் பருத்தி பயிரிடப்படுகிறது. ஆனால் 55 சதம் பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால், உணவு மட்டுமல்ல, மனிதன் உடுத்தும் துணி வகைகள் கூட நஞ்சாக மாறி வருகிறது.மனிதர்கள் அனைவரும் முடிந்தவரை மரங்களை நடவேண்டும். இயற்கையான விவசாயத்தை மேற்கொண்டால்தான், மனிதனை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும்.இவ்வாறு அவர் பேசினார்.டாக்டர் சத்திய சுந்தரி தலைமை வகித்தார். வைரவிழா மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பழனிசாமி, பவானி நதி பாதுகாப்பு கூட்டமைப்பு செயலாளர் நடராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

பரமக்குடி : தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட குழு கூட்டம் மாவட்ட தலைவர் ராமுத்தாயி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் கலைமணி அறிக்கை தாக்கல் செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் நகர் செயலாளர் பெருமாள், துணைசெயலர் வெங்கிடசாமிராஜு கலந்து கொண்டனர். விவசாயிகளின் பயிர் காப்பீடு திட்டத்தை முறைப்படுத்தி விரைந்து வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சோலையாறு அணை நீர்மட்டம் 2 அடி குறைந்தது**

வால்பாறை : வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழை குறைந்ததால் சோலையாறு அணையின் நீர்மட்டம் 2 அடி குறைந்துள்ளது.வால்பாறையில் பெய்துவரும் பருவ மழையினால் சோலையாறு அணை, தொகுப்பு அணைகளான மேல்நீராறு, கீழ் நீராறு, அப்பர் ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தது.தற்போது தென்மேற்குப்பருவ மழை குறைந்த நிலையில் எஸ்டேட் பகுதிகளில் இரவு நேரத்தில் கடுங்குளிர் நிலவுகிறது. அதிகாலை நேரத்திலும், மாலை நேரத்திலும் தேயிலை எஸ்டேட் பகுதிகளில் பனி மூட்டம் நிலவுவதால் ரோட்டில் செல்லும் வாகனங்கள், எதிரே வரும் வாகனங்கள் தெரிவதில்லை.

வனவிலங்கு நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் தேயிலை பறிக்கும் தொழிலாளர்கள் எதிரே வனவிலங்கு வந்தால் கூட தெரியாத அளவுக்கு பனிமூட்டம் நிலவுவதால் தொழிலாளர்கள் அவதிப்படுகின்றனர்.மழைப்பொழிவு குறைந்து வருவதால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்து வருகிறது.சோலையாறு அணையின் நீர்மட்டம் கடந்த 13ம் தேதி காலை 82.35 அடியாக இருந்தது. மழைப்பொழிவு குறைந்து வருவதால் நேற்று காலை அணையின்நீர்மட்டம் 80.58 அடியாக குறைந்தது. கடந்த இரண்டு நாட்களில் அணையின் நீர்மட்டம் இரண்டு அடி குறைந்துள்ளது.அணைக்கு விநாடிக்கு 942 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.அணையிலிருந்து மானம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 813 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையின் அளவு (விபரம்: மில்லி மீட்டரில்) சோலையாறு- 8, வால்பாறை- 1, மேல்நீராறு- 12, கீழ்நீராறு- 21 மழை அளவும் பதிவாகியுள்ளது.

**."தரமான பசுந்தேயிலையை வழங்குவதில்லை' : இன்கோ விவசாயிகள் மீது அமைச்சர் காட்டம்**

குன்னூர் : "இன்கோ விவசாயிகள் தரமான பசுந்தேயிலையை தொழிற்சாலைகளுக்கு வழங்குவது இல்லை,' என மாநில அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி குறை கூறினார்.மாநில அரசின், புதுப்பிக்கப்பட்ட குன்னூர் டீ சர்வ் ஏல மைய திறப்பு விழா நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. மாநில அரசின் தொழில் ஆணையரும், தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குனருமான சுந்தரமூர்த்தி வரவேற்றார். ஊட்டி எம்.எல்.ஏ., கோபாலன் பேசியதாவது;இன்கோ நிறுவனத்தை மேம்படுத்த, நிறுவன உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்ற மாநில அரசு தயக்கம் காட்டுவதில்லை. மூடப்பட்ட எப்பநாடு, கட்டபெட்டு இன்கோ தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன; தேயிலை தொழில் தற்போதுசரிவின் பாதையில் செல்ல துவங்கியுள்ளது.விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் விலை குறைந்து வருகிறது. விலை

வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள், மீண்டும் உருளைக் கிழங்கு, கேரட், முட்டை கோஸ் விவசாயத்துக்கு மாறிவிடும் மனநிலைக்கு வந்துவிட்டனர்.

விவசாயிகளின் நலன் காக்க மாநில அரசு உதவிக்கரம் நீட்ட வேண்டும்.இவ்வாறு, எம்.எல்.ஏ., கோபாலன் பேசினார்.ஏல மையத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள, எம்.எஸ்.டி.சி., நிறுவன வணிகப் பிரிவு இயக்குனர் சிங் பேசினார். எம்.எஸ்.டி.சி., நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்ததை, மாநில ஊரக தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, நிறுவன இயக்குனர் சிங், மேலாளர் வசந்தியிடம் வழங்கினார்.மாநில அரசின் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் கூடுதல் முதன்மை செயலர் செல்வம் பேசுகையில், ""மாநிலத்தில் சிறு தொழில்கள் வளர்ந்து வருகின்றன. இந்தியாவில், தமிழகத்தில் தான் அதிகளவு சிறு தொழில்கள் துவங்கவும், வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது,"" என்றார்.

டீ சர்வ் ஏல மையத்தை துவக்கி வைத்து மாநில ஊரக தொழில் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி பேசியதாவது;இன்கோ நிறுவனத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு கடந்த மாதம் 6 ரூபாய் விலை கிடைத்தது; இருப்பினும், நிறுவனம் மூலம் கூடுதலாக 2 ரூபாய் வழங்கப்பட்டது; இதனால், அரசுக்கு 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்த மாதம் மத்திய அரசின் விலை பகிர்வு திட்டத்தின் கீழ், 5 ரூபாய் மட்டுமே ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு வழங்க முடிந்தது. விவசாயிகள் நலன் கருதி, 1.50 ரூபாய் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது; இதன் மூலம் அரசுக்கு 1.50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. லாபம் வரும் போது நட்டத்தை ஈடுகட்டி கொள்ளும் நோக்கில் விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்கப்படுகிறது.

தேயிலை தொழிலில் சரிவு தென்பட இயற்கை தான் காரணம் என்று சொல்ல வேண்டும். கடந்த காலங்களில் கென்யா, இலங்கையில் வறட்சி ஏற்பட்டு, தேயிலை மகசூல் குறைந்தது. தற்போது அங்கு மழை பெய்து, வறட்சி நீங்கி, நம்மை விட தரமான தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது; இதுதான் நீலகிரி தேயிலை தொழிலின் மந்த நிலைக்கு காரணம்.இரு இலை, ஒரு கொழுந்துள்ள பசுந்தேயிலையை பறித்து உற்பத்திக்கு வழங்கினால் மட்டுமே தரமான தேயிலை தூளை உற்பத்தி செய்ய முடியும். மாறாக, நீலகிரியில் உள்ள 15 தேயிலை தொழிற்சாலைகளில் இத்தகைய தரமான பசுந்தேயிலையை பார்க்க முடியவில்லை; ஒரு அடி, இரண்டு அடி நீளத்துக்கு பசுந்தேயிலையை பறித்து வந்து விவசாயிகள் வழங்குகின்றனர்; நல்ல தரமான பசுந்தேயிலையை தனியார் தொழிற்சாலைகளுக்கு வழங்கி விடுகின்றனர்.டீ சர்வ் ஏல மையம் 40 லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அரசு நிறுவனம் என அலட்சியம் செய்யாமல், தங்களின் கடமையுணர்ந்து தரமான பசுந்தேயிலையை விவசாயிகள், உற்பத்திக்கு வழங்க வேண்டும்.

தேயிலை இடைத்தரகர்கள் அதிகளவு பங்கேற்று, கூடுதல் விலை பெற்று கொடுக்க வேண்டும்.இவ்வாறு, அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி பேசினார்.குன்னூர் எம்.எல்.ஏ.,சவுந்தரபாண்டியன், குன்னூர் நகராட்சி தலைவர் ராமசாமி பேசினர். இன்கோ சர்வ் தனி அலுவலர் ஜாப்ரி, டான் டீ இணை நிர்வாக இயக்குனர் சமந்த் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

**தாராபுரம் உப்பாறு அணையில் 10 அடி நீர்மட்டம் திருமூர்த்தி அணை பாச(ன) கரம் நீட்டியது**

உடுமலை : திருமூர்த்தி அணையிலிருந்து உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்கியதால், மூன்றாண்டுகளாக வறட்சியாக காணப்பட்ட அணையின் நீர் மட்டம் 10 அடி உயர்ந்துள்ளது.

தாராபுரம் அருகே கெத்தல் ரேவ் கிராமத்தில் உள்ளது உப்பாறு அணை. 24 அடி உயரமும், 100 ஏக்கர் பரப்பளவும், 572 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்ட இந்த அணை மூலம், 6,060 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது.போதிய மழை இல்லாததால் மூன்று ஆண்டுகளாக அணை வறண்டு காணப்பட்டது.இதனால், உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணையில் இருந்து உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்கக் கோரி தாராபுரம் பகுதி மக்கள் பல கட்ட போராட்டம் நடத்தினர். இதற்கு பி.ஏ.பி., விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். சென்னை உயர் நீதிமன்றத்தில் தண்ணீர் திறக்கக் கோரி வழக்கு தொடரப்பட்டது. இதனையடுத்து, திருமூர்த்தி அணையில் இருந்து உப்பாறு அணைக்கு தண்ணீர் திறந்து விட நீதிமன்றம் உத்தரவிட்டது. ஜூலை 8ம் தேதி முதல், திருமூர்த்தி அணையில் இருந்து உப்பாறு அணைக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கால்வாயின் 46வது கி.மீ., யில் அமைந்துள்ள அரசூர் ஷெட்டர் வழியாக உப்பாறு ஓடைக்கு திருப்பிவிடப்பட்டது.

வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் வீதம், ஏழு நாட்கள், 300 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்பட்டு, நேற்று காலை 7.00 மணிக்கு நிறுத்தம் செய்யப்பட்டது. இதனால், உப்பாறு அணையின் நீர்மட்டம் நீர் மட்டம் 10.4 அடியானது 161 மில்லியன் கன அடி நீர் இருப்பும், அணைக்கு வினாடிக்கு 257 கன அடி நீர் வரத்தும் நிலவியது.40 சதவீதம் இழப்பு? உப்பாறு அணைக்கு 300 மில்லியன் கன அடி வழங்கப்பட்ட நிலையில், 161 மில்லியன் கன அடி நீர் மட்டுமே அணைக்கு வந்துள்ளது. 140 மில்லியன் கன அடி நீர் மாயமாகியுள்ளது.

அதிகாரிகள் கூறுகையில், "அணைக்கு ஒரு சில நாளில் இன்னும் 20 மில்லியன் கன அடி நீர் வரை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 40 சதவீதம் நீர் வந்து சேரவில்லை. இதனை நீர் விரையம் என எடுத்துக்கொள்ள முடியாது, அரசூர் ஷெட்டர் முதல் உப்பாறு அணை வரை , வழியோரங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும், நூற்றுக்கணக்கான விவசாய நிலங்களுக்கும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வுக்கு இந்த நீர் பயன்பட்டுள்ளது. மேலும், உப்பாறு ஓடைகளில் உள்ள பல தடுப்பணைகள் இதனால் நிரம்பியுள்ளது,'என்றனர்.

**மானிய விலை உரத்தில் வெடிபொருள் தயாரிப்பு காரைக்காலில் ஒரு தொழிற்சாலை சிக்கியது**

ஜூலை 16,2010,00:00 IST

---

காரைக்கால் : காரைக்காலில் மேலும் ஒரு குளோரைடு தொழிற்சாலையில், விவசாயத்திற்காக மானிய விலையில் வழங்கப்படும் பொட்டாசியம் உரத்தை முறைகேடாக வாங்கி பயன்படுத்தியது ஆய்வில் தெரிய வந்துள்ளது.காரைக்கால் மேலகாசாக்குடியில் உள்ள காரைக்கால் குளோரைடு, வைகை குளோரைடு ஆகிய தொழிற் சாலைகள், தமிழகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப் படும் பொட்டாஷ் குளோரைடை வாங்கி வெடி பொருளின் மூலப் பொருள் தயாரிப்பதாக புகார் எழுந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் இரு தொழிற்சாலைகளிலும் சி.பி.ஐ., அதிகாரிகள் ஆய்வு நடத்தி, டன் கணக்கில் பொட்டாஷ் மூட்டைகளை பறிமுதல் செய்து, குடோன்களுக்கு சீல் வைத்தனர். மேலும், இது குறித்து சி.பி.ஐ., அதிகாரிகள் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.இந்நிலையில், காரைக்காலில் மேலும் ஒரு குளோரைடு தொழிற்சாலையில் பொட்டாஷ் உரத்தை முறைகேடாக வாங்கி பயன்படுத்தியது வேளாண் துறை ஆய்வில் தெரிய வந்துள்ளது.

காரைக்கால் திருப்பட்டினம் அடுத்த கீழையூர் தெற்கு பகுதியில் "குமரன் கெமிக்கல்ஸ் குளோரைடு' தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் சட்ட விரோதமாக பொட்டாசியம் உரத் தைப் பயன்படுத்தி, வெடிபொருளுக்கான மூலப்பொருள் தயாரிப்பதாக புகார் எழுந்தது.இதையடுத்து வேளாண் துறை இயக்குனர் சத்தியசீலன், சப் கலெக் டர் ஆபெல் ரோசாரியோ, கூடுதல் வேளாண் இயக்குனர் ஜெயசங்கர், இணை வேளாண் இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் அந்த தொழிற்சாலையில் ஆய்வு மேற்கொண்டனர்.ஆய்வின்போது, முறையான லைசன்ஸ் மற்றும் வேளாண் துறையில் அனுமதி பெறாமல் விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய "முயூரேட் ஆப் பொட்டாஷ்' உரத்தை வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வந்து, முறைகேடாக பயன்படுத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு டன் முயூரேட் ஆப் பொட் டாஷ் உரம் 30 ஆயிரம் ரூபாய்க்கு பதிலாக, வேளாண் உபயோகத்திற் காக என்று கூறி 5000 ரூபாய்க்கு வாங்கி உபயோகப்படுத்தப்பட் டுள் ளது ஆய்வில் தெரியவந்தது. உரத்தைப் பயன்படுத்தி, வெடிபொருட்களின் மூலப்பொருளான பொட் டாசியம் குளோரேட் தயாரிப்பது சோதனையில் தெரிய வந் துள்ளது.அந்த தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சப் கலெக்டர் ஆபெல் ரோசாரியோ தெரிவித்து உள்ளார்.

***கோவையில் வருகிற 19–ந் தேதி நடைபெறுகிறது விவசாயிகள் குடும்பத்துடன்ஆர்ப்பாட்டம் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் சிவசாமி பேட்டி***

*கோவை, ஜூலை.16–*

*கோவை நீலாம்பூர் உள்பட பல்வேறு பைபாஸ் திட்டங்களை கைவிடக்கோரி கோவையில் வருகிற 19–ந் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் குடும்பத்துடன் பங்கேற்கிறார்கள் என்று தமிழக விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.*

*பைபாஸ் திட்டங்கள்*

*கோவை காந்திபுரம் தமிழ்நாடு ஓட்டலில் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத்தலைவர் எம்.ஆர்.சிவசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–*

*நீலாம்பூர்– மேட்டுப்பாளையம் இடையே நீலாம்பூர் பைபாஸ் சாலையும், சாவடி–திருமலையாம்பாளையம் இடையே சாவடி பைபாஸ் சாலையும், பழங்கரை–தெக்கலூர் இடையே அவினாசி பைபாஸ் சாலையும், வஞ்சிப்பாளையம்–புதிய திருப்பூர் இடையே பெருமாநல் லூர் பைபாஸ் சாலையையும் அமைக்க அரசு முயற்சித்து வருகிறது.*

*பைபாஸ் சாலைகள் அமைய உள்ள இடங்கள் அனைத்தும் விவசாய பூமிகளாகும். பைபாஸ் சாலைகளுக்காக 10 ஆயிரம் ஏக்கர் விவசாய விளை நிலங்கள் கையகப்படுத்தப்படும். இந்த நிலங்களில் உள்ள கிணறுகள் மூடப்படும். இதனால் இந்த கிணறுகளை நம்பி உள்ள 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்படும். அது மட்டுமல்லாமல் 200 அடி அகலத்தில் விவசாய விளைநிலங்களுக்கு இடையே நில மட்டத்தை விட உயரமாக பைபாஸ் சாலை அமைக்கப்படும் போது சாலையின் இருபக்கம் உள்ள நிலங்களில் விவசாயம் செய்யமுடியாது.*

*100 அடி அகலம் போதும்*

*பைபாஸ் திட்டங்களால் விவசாயம் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் கேரள அரசு 200 அடி அகலம் கொண்ட பைபாஸ்சாலைத் திட்டங்களை கைவிட்டது. மேலும் 100 அடி அகலத்திலேயே என்.எச்.47 பைபாஸ் சாலை திட்டத்தை செயல்படுத்துகிறது. கோவை–மேட்டுப்பாளையம் சாலையின் அகலம் 100 அடி ஆகும். இந்த அகலத்திலேயே 4 வழிச்சாலையாக மாற்றலாம்.*

*அதே போல் நீலம்பூர், சாவடி, பெருமாநல்லூர், அவினாசி பைபாஸ் ரோடு திட்டங்களை கைவிட வேண்டும். மத்திய அரசின் 4 வழிச்சாலை திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்கள் சாலை அமைத்து வாகனங்களுக்கு சுங்கம் வசூலித்து லாபம் அடைகின்றன. வியாபார அடிப்படையில் நடைபெறும் இந்த 4 வழிச்சாலை திட்டத்திற்கு தமிழக அரசு அடிமாட்டு விலைக்கு விலையில் நிலங்களை கையகப்படுத்துகிறது. பின்னர் இந்த நிலங்களை தனியார் கம்பெனிகளுக்கு கொடுத்து விவசாயிகளை வறுமைநிலைக்கு தள்ளியிருப்பது கண்டிக்க தக்கது.*

*ஆர்ப்பாட்டம்*

*பஞ்சாப் அரசு நில ஆர்ஜிதத்திற்கு ஏக்கருக்கு ரூ.1 கோடி வரை விலைகொடுக்கிறது. தமிழக அரசு ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு லட்சம் ரூபாய்தான் கொடுக்கிறது. நிலத்தை இழக்கும்போது விவசாயிகள் சொத்தையும், தொழிலையும் இழப்பதால் நில ஆர்ஜிதத்திற்கு 2 மடங்கு வெளிமார்க்கெட் விலை கொடுக்க வேண்டும். 4 வழிச்சாலைகளுக்கு ஏற்கனவே எடுத்த நிலங்களுக்கு 2 மடங்கு வெளிமார்க்கெட் விலை கொடுக்க வேண்டும்.*

*மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு வருகிற 19–ந் தேதி காலை 10.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் தங்களது குடும்பத்துடன் பங்கேற்பார்கள்.*

*இவ்வாறு சிவசாமி கூறினார். பேட்டியின் போது கோவிந்தராஜ், ரங்கநாதன் ஆகியோர் உடன் இருந்தனர்.*

***நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் பருப்பு வகைகள் இறக்குமதி 42 லட்சம் டன்னாக அதிகரிக்கும்***



*பிரபா ஜெகன்னாதன்*
*புதுடெல்லி*

*நம் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 30 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்யப்படுகிறது. இது, நடப்பு நிதி ஆண்டில் 42 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் பருப்பு உற்பத்தி குறைவாக உள்ள நிலையில் தேவைப்பாடு அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும்.*

*பத்து ஆண்டுகளில்...*

*அடுத்த பத்து ஆண்டுகளில் பருப்பு வகைகளுக்கான தேவை 2.38 கோடி டன்னாக அதிகரிக்கும் என அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மத்திய அரசு, நம் நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனினும் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இந்நிலையில் உள்நாட்டு தேவையை ஈடு செய்ய வேண்டுமானால், குறைந்தபட்சம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு பல்வேறு பருப்பு வகைகளை குறிப்பிடத்தக்க அளவிற்கு இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.*

*நடப்பு நிதி ஆண்டில், நம் நாட்டில் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 8 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஜூன் 4–ந் தேதி வரையிலான காலத்தில் பயிரிடும் பரப்பளவு 15,000 ஹெக்டேர்தான் உயர்ந்துள்ளது. தற்போது நம் நாட்டில் ஒரு லட்சம் ஹெக்டேருக்கும் குறைவான நிலப்பரப்பில்தான் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.*

*உற்பத்தி இலக்கு*

*சென்ற நிதி ஆண்டில் உள்நாட்டில் 1.48 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தியாகி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 லட்சம் டன் மட்டுமே அதிகமாகும். நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12) கூடுதலாக 20 லட்சம் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடையும் வகையில் ஒரு ஹெக்டேர் வாயிலான உற்பத்தியை தற்போதைய 600 கிலோவிலிருந்து 800 கிலோவாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.*

*நடப்பு நிதி ஆண்டில் பருப்பு உற்பத்தி 1.57 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தேவைப்பாடு, இதை விட 42 லட்சம் டன் அதிகமாக, அதாவது 1.99 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பு நிதி ஆண்டில் 42 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்தாக வேண்டிய நிலை உள்ளது.*

***ஏழுமலை எம்.எல்.ஏ. தனது பிறந்தநாளை 'கேக்' ‹பிமீணீபீவீஸீ›‹![ஜிஞிகிஜிகி[ பணவீக்க விகிதம் 12.81%–ஆக உயர்வு மத்திய மந்திரி நாராயணசாமி நேரில் வாழ்த்து***



வில்லியனூர், ஜூலை.16–
ஏழுமலை எம்.எல்.ஏ. தனது பிறந்தநாளை 'கேக்' வெட்டி கொண்டாடினார். மத்திய மந்திரி நாராயணசாமி, நேரில் சென்று அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

ஏழுமலை எம்.எல்.ஏ. பிறந்தநாள்

புதுவை மாநிலம் ஊசுடு தொகுதி எம்.எல்.ஏ.வும், 'பாசிக்' தலைவருமான ஏழுமலை தனது பிறந்தநாளை ஊசுடு தொகுதி பங்கூரில் உள்ள அவரது வீட்டில் நேற்று கொண்டாடினார். இதற்காக அவர் நேற்று அதிகாலை எழுந்து குளித்துவிட்டு, புத்தாடை அணிந்து தனது தாய் அமராவதி, தந்தை ஆறுமுகம் ஆகியோர் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றார்.
பின்னர் அவர், மனைவி கவிபிரியா, மகன்கள் அருண்பகத், அனுஷ்பிரசாத், அபினாஷ் ஆகியோருடன்பங்கூரில் உள்ள மாரியம்மன் கோவில், வில்லியனூர் ராம பரதேசி கோவில் ஆகிய கோவில்களுக்கு சென்று பயபக்தியுடன் சாமி கும்பிட்டார். அதைத் தொடர்ந்து பங்கூரில் உள்ள அவரது வீட்டில் அவர் தொகுதி மக்கள் சந்தித்து ஆசி பெற்றார்.

நாராயணசாமி நேரில் வாழ்த்து

அப்போது அவரது ஆதரவாளர்கள், கட்சி தொண்டர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் தொகுதி மக்கள், அரசு ஊழியர்கள் உள்பட ஏராளமானவர்கள் மேள, தாளத்துடன் வந்து அவருக்கு மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.
பிறந்தநாள் விழாவுக்கு மத்திய மந்திரி நாராயணசாமி நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார். அவரது முன்னிலையில், ஏழுமலை எம்.எல்.ஏ. பிறந்தநாள் 'கேக்' வெட்டினார். முதல் துண்டை, ஏழுமலை எம்.எல்.ஏ.வுக்கு நாராயணசாமி ஊட்டினார். அதன்பின்னர் அவருக்கு நாராயணசாமி சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது அவரது காலில் ஏழுமலை விழுந்து வணங்கினார்.

முதல்–அமைச்சர் வைத்திலிங்கம்

விழாவில், முதல்–அமைச்சர் வைத்திலிங்கம், அமைச்சர்கள் ஷாஜகான், கந்தசாமி, கண்ணன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் லட்சுமி நாராயணன், தியாகராஜன், அங்காளன், அனந்தராமன், கதிர்காமம் வட்டார காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம், இளைஞர் அணி தலைவர் சங்கர், மாநில பொதுச் செயலாளர் பாண்டியன், முன்னாள் அமைச்சர் தேனீ.ஜெயக்குமார், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து தலைவர் நடராஜன் உள்பட ஏராளமானவர்கள் நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தனர்.
மேலும் வாழ்த்து தெரிவித்தவர்கள் விவரம் வருமாறு:–
மாநில காங்கிரஸ் செயலாளர் சேகர், பங்கூர் காந்தி, சண்முகம், கனகராஜ், கோனேரி லோகையன், ஊசுடு தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் செந்தில்குமார், அரியாங்குப்பம் அரசு, ஆசிரியர் சரவணன், புதுவை நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து நீர்த் தேக்க தொட்டி ஊழியர்கள் சங்க தலைவர் தனசேகர், தேங்காய் திட்டு சிவசங்கர், கூடப்பாக்கம்,

வில்லியனூர் ஜவகர் ஆங்கில உயர்நிலைப்பள்ளி நிர்வாகி அஞ்சலாட்சி, நிறுவனர் சிவராஜன், தொண்டமாநத்தம் குமரேசன்.

நலத்திட்ட உதவிகள்

ஏழுமலை எம்.எல்.ஏ. பிறந்தநாளையொட்டி, ஏழைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

ஊசுடு தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் செந்தில்குமார் தலைமையில் ரெட்டியார் பாளையம் அன்பு நிலையம் மன வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு காலை உணவும், கூடப்பாக்கத்தில் ரத்ததானம் வழங்கப்பட்டது. உளவாய்க்கால் கிராமத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பொறையூர் கிராம இளைஞர் காங்கிரஸ் சார்பில் அன்னதானமும், கோனேரிக்குப்பத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு கருவிகள், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. மீனாட்சி அம்மன் கோவிலில் சிறப்பு அபிஷேகம் நடந்தது.

மேலும் இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கை கெடிகாரமும், மற்றும் மாணவ– மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகங்களை, ஏழுமலை எம்.எல்.ஏ. வழங்கினார்.

தங்க தேர்

மாலையில், மணக்குள விநாயகர் கோவிலில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் சங்கர் தலைமையில் தங்க தேர் இழுக்கப்பட்டது. இதில் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.